DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 93/2016

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | கோபிநாத் |
| Father / Husband Name | பச்சையப்பன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 22.07.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது செக்கடிகுப்பம் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ஆரவல்லி என்பவர் எனது அம்மா ஆவார். 01.01.2016 ம் தேதி காலை 5.00 மணிக்கு சென்னை ஏர்போர்ட்டில் இருந்து எங்கள் ஊருக்கு தவேரா காரில் நானும், என் குடும்பத்தார் ஆரவல்லி, பச்சையப்பன், அமுதா, கவிதா மற்றும் அக்கா குழந்தைகள் கமலேஷ் மற்றும் பவித்ரா ஆகியோர் ஒழுப்பாக்கம் பெட்ரோல் பங்க் அருகே வரும்போது பெட்ரோல் பங்கில் இருந்து டாரஸ் லாரி வேகமாகவும் எவ்வித சைகையும் காட்டாமல் வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் எனது அம்மா ஆரவல்லி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். விபத்தில் எனக்கும் காரில் வந்த என் குடும்பத்தாருக்கும் அடிபட்டது. காயம்பட்ட நாங்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். இது சம்மந்தமாக டிரைவர் சரவணன் புகார் கொடுத்தார். டாரஸ் வாகனத்தை ஓட்டிய டிரைவரை பார்த்தால் அடையாளம் தெரியும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** நான் பயணம் செய்த காரில் என் பெற்றோர்கள் ஏர்போர்ட்க்கு வந்து என்னை அழைத்துவந்தார்கள் என்றால் சரிதான். அந்த கார் எத்தனை மணிக்கு புறப்பட்டு ஏர்போர்ட்க்கு வந்தது என்று எனக்கு தெரியாது. நான் வரும்போது அவர்கள் அங்கு இருந்தார்கள். நாங்கள் ஏர்போர்ட்டில் இருந்து காலை 4 முதல் 4.30 மணிக்கு கிளம்பினோம். எங்களுடைய டிரைவர் தூங்கி ஓய்வெடுத்தாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியவில்லை, ஆனால் நான் பார்க்கும்போது அவர் தெளிவாக தான் இருந்தார். லாரி வந்து மோதியதாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எங்கள் வாகனத்தில் யார் யார் தூங்கிக்கொண்டு

வந்தார்கள் என்றால் நான் 4 ஆண்டுகள் கழித்து வெளிநாட்டில் இருந்து வந்ததால் அனைவரும் பேசிக்கொண்டு தான் வந்தோம்.

3. பொதுவாக 70–80 கி.மீ காரில் பயணம் செய்ய வேண்டும் என்றால் சுமார் 1 மணிநேரத்திற்கு மேல் ஆகும் என்றால் சரிதான். ஏர்போர்ட்டில் இருந்து விபத்து நடந்த இடம் சுமார் 100 கி.மீ தூரம் இருக்கும் என்றால் எனக்கு தெரியவில்லை. அவ்வளவு தூரம் வரவேண்டும் என்றால் சுமார் 1 1/2 மணி நேரம் அல்லது 2 மணிநேரம் ஆகும் என்றால் எனக்கு தெரியவில்லை. விபத்து நடந்தது அதிகாலை என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 6 முதல் 8 வரை என்னுடைய உறவினர்கள் ஆகும். நான் சொல்வதுபோல் எந்த விபத்தும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எங்களுடைய ஓட்டுநர் சரியாக தூங்காமல் ஓட்டியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் விபத்தில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. போலிசார் என்னை விபத்து நடந்த அன்று காலை 9.00 மணியளவில் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு ரோந்து போலிஸ் உடனே வந்தது. இறந்த நபருக்கு இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக தவறாக புகார் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 93/2016

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | பச்சையப்பன் |
| Father / Husband Name | தொப்பமன்னன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 22.07.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது செக்கடிகுப்பம் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். இறந்துபோன ஆரவல்லி எனது மனைவி ஆவார். 01.01.2016 ம் தேதி எனது மகன் வெளிநாட்டில் இருந்து வந்தார். அவரை அழைத்துவருவதற்காக சென்னை ஏர்போர்ட்டிற்கு காரில் சென்றோம். என்னுடன் கவிதா, அமுதா, ஆரவல்லி மற்றும் எனது பேரக்குழந்தைகள் மற்றும் கோபிநாத் ஆகியோர் வந்தோம். சுமார் காலை 5.00 மணிக்கு ஊர் பெயர் சரியாக தெரியவில்லை, பெட்ரோல் பங்கில் இருந்து லாரி வந்து நாங்கள் சென்ற காரில் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் எனக்கு தலை மற்றும் முகத்தில் அடிபட்டு மயக்கம் வந்துவிட்டது. என் மகள் கவிதாவிற்கு கையில் அடிபட்டது. எனது மனைவி ஆரவல்லி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனையிக்கு அழைத்துச்சென்றார்கள். நான் சுமார் 15 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** நாங்கள் முதல் நாள் இரவு சுமார் 10.00 மணியளவில் புறப்பட்டோம். நாங்கள் ஏர்போர்ட்டுக்கு போய் என் மகனை அழைத்துக்கொண்டு திரும்பினோம் என்றாலும், இடையில் ஓட்டுநர் தூங்கவில்லை என்றாலும் சரிதான். விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஞாபகமில்லை. இரவு முழுவதும் பயணம் செய்த கலைப்பில் எங்களுடைய ஓட்டுநர் தூங்கிவிட்டதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் ஓட்டுநர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 93/2016

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | கவிதா |
| Father / Husband Name | குமார் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 22.07.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சென்னை நுங்கம்பாக்கத்தில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ஆரவல்லி எனது அம்மா ஆவார். 01.01.2016 ம் தேதி காலை 5.00 மணிக்கு நான் எனது அம்மா ஆரவல்லி, அப்பா பச்சையப்பன், தம்பி கோபிநாத், தங்கை அமுதா மற்றும் எனது குழந்தைகள் இரண்டுபேர் சென்னையில் இருந்து எங்கள் ஊருக்கு காரில் சென்றோம். சம்பவம் நடந்த ஊரின் பெயர் ஞாபகமில்லை, மதுராந்தகத்தில் இருந்து சுமார் 1 கி.மீ தூரத்தில் விழுப்புரம் செல்லும் சாலையில் நாங்கள் காரில் சென்றுக்கொண்டிருக்கும்போது பெட்ரோல் பங்கில் இருந்து வந்த ஒரு லாரி காரின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் எனது அம்மா சம்பவ இடத்தில் இறந்துவிட்டார். எனது அப்பாவிற்கு முகத்தில் அடிபட்டது. எனக்கு தோல் பட்டையில் அடிபட்டது. தங்கை அமுதாவிற்கும் தோல் பட்டையில் அடிபட்டது. காயம்பட்ட நாங்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்கை பெற்றோம். நான் எனது அம்மா இறந்துவிட்டதால் ஒரு சிகிச்சையில் இருந்து பிறகு சிசிக்சையில் இருந்து வெளியே வந்துவிட்டேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** நாங்கள் ஏர்போர்ட்டில் இருந்து சுமார் 4.00 மணிக்கு கிளம்பினோம். நாங்கள் வந்த கார் எத்தனை நபர்கள் பயணம் செய்யக்கூடிய கார் என்றால் கார் பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் எத்தனை பேர் வந்தோம் என்றால் 5 பெரியவர்கள், 2 குழந்தைகள், எங்களுடன் டிரைவரும் வந்தார் என்றால் சரிதான். லாரி வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதியதாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். என்னை போலிசார் மருத்துவமனையில் வைத்து விபத்து நடந்த அன்றே காலை 9.00 மணியளவில் விசாரணை செய்தார்கள். அதன்பிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. விபத்து நடந்தவுடன் நான் மயங்கிவிட்டேன்.

எங்கள் ஓட்டுநர் இரவு முழுவதும் தூக்க கலக்கத்தில் வண்டி ஓட்டியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இறந்துபோனது எனது அம்மா என்பதால் அவருக்கு இழப்பீடு வாங்க வேண்டு பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த விபத்தும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 93/2016

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | வேடியப்பன் |
| Father / Husband Name | கண்ணன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 22.07.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது செக்கடிகுப்பம் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ஆரவல்லியை தெரியும். 01.01.2016 ம் தேதி அதிகாலை 6.00 மணிக்கு ஆரவல்லி மகன் கோபி போன் செய்து மதுராந்தகம் அருகே ஒழுப்பாக்கத்தில் அவர்கள் வந்த கார் மீது பெட்ரோல் பங்கில் இருந்து வந்த டாரஸ் லாரி மோதி விபத்து ஏற்பட்டு அம்மா இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். நான் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அவருக்கு தலையில் அடிபட்டு இறந்திருந்தார், அவரின் பிரேதத்தின் மீது போலிசார் விசாரணை நடத்தினார் நான் சாட்சியாக இருந்தேன்.

**குறுக்கு விசாரணை**

2. விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போன் மூலம் எனக்கு தகவல் வந்தது என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. இறந்த நபர் என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு இழப்பீடு பெறவேண்டும் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 93/2016

Miscellaneous :

Sessions : PW 5

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | வெள்ளியங்கிரி |
| Father / Husband Name | உத்தரன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 22.07.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மேல்களவாய் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ஆரவல்லியை தெரியும். 8 வருடங்களுக்கு முன்பு ஜனவரி மாதம் 01 ம் தேதி நான் வீட்டில் இருந்தபோது அதிகாலை 6.00 மணிக்கு ஆரவல்லி மகன் கோபி போன் செய்து மதுராந்தகம் அருகே அவர்கள் வந்த கார் மீது டாரஸ் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார். நான் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். என் சித்தி ஆரவல்லிக்கு தலையில் அடிபட்டு இறந்திருந்தார், அவரின் பிரேதத்தின் மீது போலிசார் விசாரணை நடத்தினார் நான் சாட்சியாக இருந்தேன்.

**குறுக்கு விசாரணை**

2. விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போன் மூலம் எனக்கு தகவல் வந்தது என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இறந்த நபரின் உடலை வாங்கும்போது கையெழுத்து கேட்டார்கள் நான் கையெழுத்து செய்தேன். இறந்த நபர் என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு இழப்பீடு பெறவேண்டும் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 93/2016

Miscellaneous :

Sessions : PW 6

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | வரதராஜ் |
| Father / Husband Name | தொப்பைமன்னன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 22.07.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது செக்கடிகுப்பம் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ஆரவல்லியை தெரியும். 01.01.2016 ம் தேதி நான் வீட்டில் இருந்தபோது அதிகாலை 6.00 மணிக்கு ஆரவல்லி மகன் கோபி போன் செய்து மதுராந்தகம் அருகே அவர்கள் வந்த கார் மீது பெட்ரோல் பங்கில் இருந்து வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார். நான் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். என் அண்ணி ஆரவல்லிக்கு தலையில் அடிபட்டு இறந்திருந்தார், அவரின் பிரேதத்தின் மீது போலிசார் விசாரணை நடத்தினார் நான் சாட்சியாக இருந்தேன்.

**குறுக்கு விசாரணை**

2. விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போன் மூலம் எனக்கு தகவல் வந்தது என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இறந்த நபரின் உடலை வாங்கும்போது கையெழுத்து கேட்டார்கள் நான் கையெழுத்து செய்தேன். இறந்த நபர் என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு இழப்பீடு பெறவேண்டும் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 93/2016

Miscellaneous :

Sessions : PW 7

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | முருகானந்தம் |
| Father / Husband Name | சீராளன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 22.07.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது உழுதமங்களம் கிராமத்தில் குடியிருந்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். சாட்சி மதன்ராஜ் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 01.01.2016 ம் தேதி காலை 10.00 மணிக்கு நானும் மதன்ராஜ் என்பவரும் ஒழுப்பாக்கம் பெட்ரோல் பங்க் அருகே வரும்போது போலிசார் ஒரு விபத்து சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 93/2016

Miscellaneous :

Sessions : PW 8

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | மதன்ராஜ் |
| Father / Husband Name | அண்ணாதுரை |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 22.07.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கருங்குழி கிராமத்தில் குடியிருந்து சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். சாட்சி முருகானந்தம் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 01.01.2016 ம் தேதி காலை 10.00 மணிக்கு நானும் முருகானந்தம் என்பவரும் ஒழுப்பாக்கம் பெட்ரோல் பங்க் அருகே வரும்போது போலிசார் ஒரு விபத்து சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.